# காஞ்சி

நிறுவனர்:

அண்ணாதுரை

3-11-68

விலை 20 காசு



# அகராதி மேதை சாமுவேல் ஜான்சன்!

ஆங்கில மொழியின் வளத்தை வரையறுத்து உலகுக்களித்த மேதைகளில் முக்கியமாகக் குறிப்பிடத்தகுந்தவர் சாமுவேல் ஜான்ஸன் ஆவார்.

உலகெங்கும் பரவி, அறிவூட்டும் 'ஆங்கில டிக்ஷனரி'யை முதன்முதலாக ஆக்கி அளித்து 'ஆங்கில அகராதியின் தந்தை' என்று சிறப்புப் பெற்ற சாமுவேல் ஜான்ஸன் பிறந்தது, ஸ்டாட் போர்டுஷயரிலுள்ள விச்பீல்டு என்ற ஊரில், 1709-ல்!

'டாக்டர் ஜான்ஸன்' என்று மக்களால் அழைக்கப்பட்ட இவர், சிறுவயதில் 'ஸ்குரோபுலா' என்ற கடும் நோயினால் பீடிக்கப்பட்டுத் தமது கண்பார்வை ஒன்றை இழக்க நேரிட்டது.

ஞாபகசக்தி அதிகம் படைத்த இவர், தமது பத்தொன்பதாவது வயதிலேயே 'ஆக்ஸ்போர்டு யுனிவர்ஸிடி'யில் 'இலக்கியகர்த்தா'வாக விளங்கி தமது புகழைப் பெருக்கிக்கொண்டார்.

வறுமையின் காரணமாகத் தமது அறிவைத்தான் இவரால் பெருக்க முடிந்ததே தவிர, உடலையோ, உடையையோ இவரால் கவனித்துக் கொள்ள இயலாததால் சக மாணவர்களிடம் கேலிக்கு ஆளானார். அதே கொடிய வறுமை இவரை 'யுனிவர்ஸிடி' பட்டம் பெற முடியாமல் விரட்டியது.

மனமுடைந்த ஜான்ஸன் தமது சொந்த ஊரான விச்பீல்டுக்கே திரும்பிச்சென்றார். எங்கு சென்றால்தான் என்ன, வறுமை விடவாபோகிறது. பிழைப்பைத்தேடி லண்டன் வந்த ஜான்ஸன், கதை, கவிதை, கட்டுரை எழுதிப் பிழைத்தார். பத்திரிகைகளுக்கு நிருபரானார். இவருடைய கவிதைகள் அறிஞர் பலரால் பாராட்டப் பெற்றன.

இவருடைய கற்பனை சக்தியும், அறிவாற்றலும், ஆங்கிலப் புலமையும் கண்ட பிரசுரகர்த்தர்கள், ஆங்கில மொழிக்கு அகராதி ஒன்று வகுத்துத் தர வேண்டினர்.

பத்தாண்டுகள் மிகக் கடுமையாக உழைத்து 1755-ல் ஆங்கில அகராதியை வெளியிட்டார். எந்தத் தனி மனிதனும் சாதிக்காத சாதனையைச் சாதித்த இவ்வறிஞர் பெருந்தகையை அகில உலகமே போற்றிப் புகழ்ந்து பாராட்டியது.

வறுமையால் பலகாலம் போராடிய இவரின் அறிவையும், கடும் உழைப்பையும் பாராட்டிய மூன்றும் ஜார்ஜ் மன்னர் வருடமொன்றுக்கு 300-பவுன் உபகாரச் சம்பளமாக அளித்து வந்தார்.

அறிவாற்றல் நிறைந்த பேச்சும், அபாரமான எழுத்தாற்றலும் பல இலக்கிய நண்பர்களை இவருக் களித்தது!

தமது வாழ்க்கை வரலாற்று நூல் ஒன்றை மிகச் சிறந்த முறையில் ஜான்ஸன் எழுதுவதற்காக, இவரது இலக்கிய நண்பரான 'பாஸ்வெல்' மிகவும் உதவிபுரிந்தார்.

அறிவோடு எதுவுமே போராடி வெற்றிபெற முடியாதபோது, இந்த வறுமை மட்டும் எம்மாத்திரம்? 'அறிவுடையார் எல்லாம் உடையார்' என்னும் வள்ளுவர் வாக்கிற்கிணங்க, ஆங்கில "அகராதி மேதை"யான சாமுவேல் ஜான்ஸன் தமது ஒரே கண்ணால் மட்டும் இந்த உலகையே கவர்ந்தார். ஆனால் இன்றோ, இவர் ஆக்கி நமக்களித்த ஆங்கில அகராதியை லட்சோப லட்சம் கண்கள் கண்டு பயன்பெறுவதை அறியாதார் யார்?

—அவினாசி முருகேசன்

★

## பேர் எடுப்போம்!

சங்கத் தமிழர்
எங்கும் புகழைத்
தங்கிட வைத்தாரே!—அந்தச்
சிங்கத் தமிழர்
தங்க ளினத்தோர்
மங்கி யிருப்பதுவா?

ஞாலம் அனைத்தும் நம்
சீலம் உணர்ந்திடும்
காலம் பிறக்காதா?—அலங்
கோலம் தொலைந்து நற்
காலம் பிறந்தது
சீலம் சிறக்காதா?

நாடு விழித்தது
கேடு தொலைந்தது
வீடு விளங்காதா?—பண்
பாடு வளர்ந்திடப்
பாடுபட்டால் தமிழ்
நாடு துலங்காதா?

வள்ளுவர் நல்லவர்;
வல்லவர்; அன்னவர்
சொல்வழி யேநடப்போம்!—நாம்
உள்ளவ ரைப்பிறர்
'நல்லவர்' என்றே
சொல்லிடும் பேரெடுப்போம்!

—புலவர் பொன்னிவளவன்

# காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

ஆண்டு சந்தா ரூ. 10 ஆறுமாதம் ரூ. 5

மலர் 5 3—11—68 இதழ் 15

## வயிறு—இருசாரார்க்கும் உண்டே!

தொழிலாளர்களுக்குக் கூலி உயர்வு கிடைக்க வேண்டும்; அவர்களது குடும்பமும் மற்ற நிலையினரைப் போலவே எல்லா நலனும், வளனும் பெற்று இன்புற்று இருக்கவேண்டும் என்று கூறப்படுவதை எந்த ஒருவராலும் ஆட்சேபிக்க முடியாது.

என்னதான் காரண காரியங்களை எடுத்துக் காட்டினுலும் தொழிலாளர்களது அந்தஸ்து மேம்பட வேண்டும்—அதற்கான ஊக்கமும் போதிய ஊதியமும் நல்கப்பட வேண்டும் என்பதிலும் இரு வேறுபட்ட கருத்துக்கள் இருக்க இடமில்லை.

அதேபோது, அந்தத் தொழிலாளர் குடும்பங்களை வாழச் செய்ய, ஊதியம் கொடுத்துக் கொண்டுவர, மூலதனத்தைக் கொண்டிருப்போர் இருக்க வேண்டாமா? என்று கேட்டால், நம் நாட்டு பொதுவுடைமைக் கட்சிக்காரர்களுக்கு மூக்குக்கு மேலே கோபம் பொத்துக்கொண்டு வந்து விடுகிறது.

நியாயமென்று படுவதை மனசாட்சி ஒத்துக் கொள்ளும் ஒன்றை எடுத்துக் காட்டினுல்கூட, கம்யூனிசப் பார்வையில், அது "முதலாளித்துவப் போக்கு" என்றும், "பூர்ஷ்வா மனப்பான்மை" என்றும் தோன்றி விடுகிறது.

இந்தியத் துணைக்கண்டத்தின் கடந்த கால திட்டங்கள் விழுமிய பலனை நல்காதது மட்டுமல்லாமல், இலக்கை எட்டிப் பிடிக்கவும்கூட முடியாமல் போய் விட்ட பல காரணங்களாலும், மத்திய அரசின் கொள்கைகள் சிலவற்றின் காரணமாகவும் பரவலாக, தொழில் நடத்தும் நிலையில் விரும்பத்தகாத போக்கு ஏற்பட்டு விட்டதையும் கம்யூனிஸ்டுகள் மறுக்க முடியாது.

ஒரு தொழில் நிறுவனத்தில் இதுபோன்ற ஒரு நிலைமை ஏற்பட்டால், பாதிக்கப்படுவது தொழில் நடத்துவோர் மட்டுமல்ல. தொழிலாளர்களும் கூடத்தான்! அவ்வாறு பாதிக்கப்பட வேண்டும் என்பது நம் கருத்தல்ல—பாதிக்கப்படும் நிலைமை என்ன என்பதைத் தொட்டுக் காட்டுவதே நம் எண்ணம்—இதுவும் கம்யூனிஸ்டுகளுக்குப் புரியாமலிருக்க முடியாது.

என்ருலும் அந்தத் தொழில் பிரச்னையில் முழுமூச்சாக ஆதிக்கம் செலுத்த முனைந்து—அன்ருடப் பிரச்னையோடு இணைத்து விமர்சிக்க முயல்வதையும் நடவடிக்கைகளிலீடுபடுவதையும்தான் ஏன் என்று நம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை. பாதிக்கப்படுகிற ஒரு தொழில் காரணமாக—அந்தத் தொழிலாளரும் பாதிக்கப்படுகிறபோது, தொழிலும் கெடக்கூடாது, தொழிலாளரும் தவிக்கக்கூடாது—அதற்கான நடைமுறை என்ன என்பதைக் காண்பதுவே நல்ல நெறியாக இருக்க முடியும்.

மாருக், ஒருபால் கோடி, ஒரு சார்பான நடவடிக்கைகளில் இறங்கும்போது எதிர்பாராத பல விளைவுகளையும் சந்திக்க வேண்டிய நிர்பந்தம் சரியாகவோ, தவருகவோ, ஏற்பட்டு விடுகிறது. அந்த விளைவுகள் ஆட்சித்துறைவரையில் வந்து—தன் கைங்கர்யத்தையும் காட்டத்தவறுவதில்லை.

இதுபோன்ற ஒருநிலை அந்த நிலையை உண்டாக்கிவிடும் ஒரு அரசியல் கட்சிக்கு லாபமாக இருக்கக் கூடும். ஆனுலும் பெருவாரியாக இதன்மூலமும் தொழிலாளர்கள்தான் பாதிக்கப்படுவார்கள் என்பதை, அந்த நிலையை உண்டாக்கிவிடும் அரசியல் கட்சி அறியாமலிருக்கமுடியாது. அறிந்தும், அரசியல் காரணமாக இந்த நிலைமைகளை அதிகப்படுத்திக் கொண்டே போவதுதான் அரசியல் என்ருல், அந்த அரசியல் அதிக நாளைக்கு ஒரு ஆரோக்கியச் சூழலை அமைத்துக்கொள்ள முனையும் ஒரு நாட்டுக்கு உகந்ததாகவும் இருக்கமுடியாது.

நாடெங்கும் இந்த நிலை பரவலாகவே இருக்கிறது. என்ருலும் கடந்த இரண்டு மூன்று நாட்களாகத் தஞ்சை மாவட்டத்தில் நடைபெற்றுவரும் போக்கு நம்மை இப்படித்தான் எண்ணச் செய்கிறது. இந்தக் கண்ணேட்டத்துடன்தான் தஞ்சைப் பிரச்னையிலும் அணுக முடிகிறது.

தமிழகத்தின் உணவுப் பிரச்னையைத் தீர்க்கும் பொறுப்பில் மகத்தான பங்குபெற்றுக் கொண்டிருக்கும் பகுதிதான்—தஞ்சைதிருச்சி மாவட்டங்களாகும். தற்போதையகழக ஆட்சி, நாட்டின் உணவுப் பிரச்னையில் கொண்டுள்ள அக்கறையும், மேற்கொண்டுள்ள முயற்சிகளும் கம்யூனிஸ்டுக் கட்சியினர் அறியாததல்ல.

ஆயினும், கூலித்தகராறு என்பதன் பேரால் விளைச்சல்களை நாசப்படுத்தும் முயற்சியிலீடுபட்டிருக்கிருர்கள் என்ற செய்திகளைப் படிக்கிறபோது—கம்யூனிஸ்டுகள் நாட்டில் எத்தகைய அரசியல் நடத்தவிரும்புகிருர்கள் என்று எண்ணிப்பார்க்கவே தோன்றுகிறது!

அறுவடைக் கூலித் தகராறு என்பது ஒவ்வொரு ஆண்டு ஏற்படுவதும், அதன் காரணமாக வயலில், கதிர் முற்றித் தலைசாய்ந்து கிடக்கும் பயிர், இந்தக் கொடுமையினைப் பொறுத்துக்கொள்ளமாட்டாது நெல் மணிகளைக் கீழே உதிர்த்து விட்டுவிட்டு தாள் மட்டும் நிற்கின்ற காட்சிகளும், கண்ணீர் சோரச் செய்ய போதுமானவையாகும்.

கொள்முதல் விலையைக் கூட்டிக் கொடுக்கவேண்டும் என்று ஒருபுறம் கூச்சல் கிளப்பிக்கொண்டே, அது நிறைவேறப்படாத நிலையில் கூலித் தகராறை உண்டாக்கிக்கொண்டு வருவதும் அப்பட்டமான அரசியலே அல்லாமல், தொழிலாளர் நலன்—நாட்டு மக்கள் நலன் பேணும் செயலாகத் தோன்றவில்லை.

அறுவடைக்கு முன்னதாக — சாகுபடியாளர் — தொழிலாளருக்கிடையே கூலி தொடர்பான ஒரு ஒப்பந்தம் ஏற்பட்ட பின்னரும். இப்படியொரு நிலையை உண்டாக்கிக் காட்டி வருவது பச்சையான ஒரு துரோகச் செயலேயாகும். ஒப்பந்தப்படி, கூலி அப்படியொன்றும் குறைவாக நிர்ணயிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. என்ருலும் தகராறுகள் கிளப்பப்படுகின்றன.

வயிறு என்பது ஒரு சாராருக்கு மட்டுமல்ல—இரு சாராருக்கும் உண்டு என்பதைப் பொதுவுடைமையர் உணர்ந்து கொண்டால்தான், எதிர்கால அமைதி நிலைக்கவாய்ப்புண்டாகும். எல்லாத்துறைதொழிலுக்கும் தொழிலாளருக்கும் நலம் பயப்பதாகவும் அது அமையும்,

# கேள்வி ? பதில்

1. கழகஆட்சி வந்தபின் அடிக்கடி தொழிற் கூடங்களில் கதவடைப்பு ஏற்படுகிறதே, காரணம் என்ன?

தங்கள் கேள்வியிலேயே பதில் இருக்கிறதே! கழக ஆட்சியை காங்கிரஸ் தொழிலதிபர்களால் ஒப்புக்கொள்ள முடியவில்லை. அதுமட்டுமல்ல — கடந்த இரு பதாண்டுக் காலத்தில் தொழிலதிபர்களுக்குக் கிடைத்து வந்த "அனுமத்து" சலுகைகள் எதுவும் இப்போது கிடைக்கவில்லை. அதோடு, சம்பாதிக்கவேண்டிய அளவுக்கு முதலாளிகள் சம்பாதித்துவிட்டார்கள். தொழிலாளிகள்தானே, அவர்கள் எக்கேடு கெட்டால் என்ன என்ற அளவுக்கு காங்கிரசும் இதில் தனி அக்கறை செலுத்துகிறது! ஆனாலும் இதுபோன்ற நிலைமைகள் விரைவில் சீர்படவே செய்யும்!

2. சுகர்னோ, சிறைத் தண்டனை பெற்றுவிட்டதாகச் சொல்லப்படுவது உண்மையா?

அதில் உண்மை இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால், அவரது ஆட்சியில் அமைச்சர்களாக விருந்த இருவருக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது மட்டும் தெரிகிறது. மேஜர் ஜெனரல் அகமது என்பவருக்கு 6 ஆண்டுகளும், டாக்டர் முகமது அகாதி என்பவருக்கு 12 ஆண்டுகளும் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. முன்னவர் மக்களது ஆத்திர உணர்ச்சியைத் தூண்டியதாகவும், பின்னவர் பணம் கையாடல்செய்ததாகவும்வழக்கு.

3. மகாத்மா காந்தி மூத்தவரா? முகமதலி ஜின்னா மூத்தவரா?

காந்தியடிகள்தான் மூத்தவர். அவர் 1869ல் பிறந்தார். அவர் பிறந்த ஏழு ஆண்டுகளுக்குப் பிறகுதான் ஜின்னா பிறந்தார். ஆனால் மறைவில் மட்டும் இருவருக்கும் பொருத்தமிருக்கிறது. இருவரும் 1948-ல்தான் மறைந்தார்கள்.

4. "வெண்பாப் போட்டி" எப்போது தொடங்கப் போகிறீர்கள்?

நவம்பர் மத்தியிலிருந்து அமைச்சர்முத்துசாமி அவர்களது தொடர் கட்டுரையும் அடுத்து இதே திங்களில் "கல்கி" இதழில் தொடர்கதை எழுதிப்புகழ்பெற்ற "சோமு" அவர்களது தொடர் கதையும் வெளிவர விருக்கின்றன. தென்னரசு அவர்களதுகதைவேறு இடம் பற்றி இருக்கிறது. நவம்பர் முடிவில்தான் 'வெண்பாப் போட்டி" பற்றி முடிவுக்கு வர முடியும்போல் சூழ்நிலை அமைந்திருக்கிறது.

5. சென்னையில் தி. மு. க. செல்வாக்குக் குறைந்திருக்கிறது என்று ஈ. வெ. ரா. பெரியார் அவர்கள் கருத்தறிவித்திருப்பதுபற்றி என்ன சொல்கிறீர்கள்?

கழகத்தின் நலனும், அதன் ஆட்சியின் ஸ்திரத் தன்மையிலும் மாறாத வேட்கை மிகுந்திருப்பவர் பெரியார் அவர்கள். நம்முடைய குற்றங்களைக் கடிந்து கொண்டிருக்கிறார். திருந்திக் கொள்ளவேண்டியதுநாம்தானே! பெரியாரது கருத்தை அந்த வகைக்குப் பயன்படுத்திக் கொள்ளுங்களேன்!

6. நாகர்கோயில் தேர்தலில் காமராசருக்குப் பதிலாக ஒரு மாணவர் நிறுத்தப்பட விருக்கிறாராமே, உண்மையா?

அப்படி ஒரு செய்தி உலவத்தான் செய்கிறது. காங்கிரசுக்காரர்கள் மாணவர்களை மதிக்கத் தொடங்கி இருக்கிறார்கள் என்றும் இதற்குப் பொருள் கொள்ளலாம். அல்லது இன்னொரு மாணவர் வந்து தமக்கு மற்றுமொரு "விருதுநகராகி" விட்டாலும் விடலாம் என்ற அச்சம் என்றும் பொருள் கொள்ளலாம்!

7 இந்த மாதத்துக்குரிய "லட்சாதிபதிகள்" பத்துப்பேர் என்பது உண்மைச் செய்தியா!

பரிசுச் சீட்டுகளின் விற்பனை, அந்த நிலையைத்தான் உண்டாக்கி விட்டிருக்கிறது. நல்லது தானே! ஒரு ஆண்டுக்கும் ஐந்து ஆண்டுக்கும் என்று கணக்கிட்டுப் பாருங்கள்! எப்படியோ மாதத்துக்குப் பத்து லட்சாதிபதிகள் என்பது 'காஞ்சி'யின் ஆசை! அது நிறைவேறுகிறது இப்போது!

8 ஒரு ஊரில் ஒன்றுக்கு மேற்பட்ட அஞ்சல் நிலையங்கள் செயல்படுவது பற்றித் தங்கள் கருத்தென்ன?

மேலோட்டமாகப் பார்க்கிறபோது, பொது மக்களுக்குச் சவுகரியம் செய்துகொடுப்பதுபோலத்தான் தோன்றுகிறது. சென்னை போன்ற பெரியதொரு நகரத்தில் பகுதிக்குப் பகுதி இருப்பது மிக மிக அவசியமே. நடுத்தரமான ஒரு நகரத்துக்கு அப்படி அவசியம் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. கார்டு, கவர், அஞ்சல்தலை போன்றவைகளை அருகேயே பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டாலும், இதேபோல் கிடைக்க மாற்று வழிகளைக் கையாள முடியும்—சிரமம் சிலவு ஏதுமின்றி. ரிஜிஸ்டர், மணியார்டர் போன்றவைகளுக்குக்கொஞ்சதூரம்நடந்து போய் வருவது கஷ்டம்தான் என்றாலும், முடியக்கூடாதது அல்ல. பொருளாதார மிச்சம் அதிக அளவுக்கு ஏற்படும்! அதே வேளையில், வேலை இல்லாத சிக்கலும் கூடவே ஏற்பட்டுவிடும்! வேலைஇல்லாத்திண்டாட்டத்தை அதிக அளவுக்கு ஈடுசெய்து கொண்டிருப்பது, இது போன்ற பல அரசுச் செயலகங்கள் தானே!

9 மாநகராட்சித் தேர்தல் பற்றி நிஜலிங்கப்பா கூறுகிற கருத்து ஒப்ப முடிந்ததா?

அந்த ஆறுதல்கூட அவர்களுக்குக் கிடைக்கக்கூடாது என்று நீங்கள் கருதுவது பச்சைச் சுயநலமாகும்!

10 "தொழிற்புரட்சி" என்றால் என்ன?

1947க்குப் பிறகு இந்தியத் துணைக்கண்டத்தில் வளர்ச்சி பெற்றிருக்கிற தொழில் வாய்ப்புக்களும், தொழிற் புரட்சிதான்! தொழிலகங்களில் "வீக்கநிலை" தோன்றி விபரீதம் விளைவதும் தொழிற்புரட்சிதான்!



# புதிய சரித்திரம்!

அன்புள்ள நண்பா!

சென்னை மாநகராட்சித் தேர்தல் நடைபெற்று முடிந்துவிட்டது. தமிழ் நாட்டின் தலை எழுத்தையே மாற்றியமைக்கப்போகும் தேர்தல் என்றெல்லாம் வருணிக்கப்பட்டு வந்த அந்த தேர்தல் சுவையான திருவிளையாடல்களோடு முடிவடைந்துவிட்டது!!

ஒரு நாட்டில் ஒரே கட்சியே ஆளுங் கட்சியாக விருந்து, அதனை எதிர்க்கின்ற இன்னொருகட்சி, தேர்தலில் போட்டியிட வருகிறபோது, நான் அதைச் செய்வேன்; இதைச் செய்வேன் என்றெல்லாம் வாக்குறுதிகள் வழங்கி, ஆளுங்கட்சியை எதிர்ப்பது என்பது அரசியல் நடைமுறைதான். இதில் வியப்புக் குரியதோ சிறப்புக்குரியதோ ஒன்றுமில்லை.

ஆண்டு கொண்டிருக்கிற ஒரு கட்சியை, ஆண்டு கொண்டிருந்து பதவியைவிட்டுத் துரத்தப்பட்ட ஒரு கட்சி எதிர்த்துப் போட்டியிடுகிறபோது நான் அதைச் செய்தேன்; இதைச் செய்தேன் என்று பேசி, ஆளுங் கட்சி அதைச் செய்யவில்லை; இதைச் செய்யவில்லை என்றெல்லாம் கண்டனக்கணைகளை எழுப்பி இரண்டு கட்சிகளின் ஆட்சி முறையினையும் ஒப்பிட்டுக் காட்டிப் பேசி, தங்களை ஆதரிக்க வேண்டுமென வாக்காளர் பெருமக்களிடம் கேட்டுக் கொள்வது என்பது அரசியலில் ஆரோக்கியமான ஒரு சூழ்நிலையாகும்.

இந்த சூழ்நிலை, நடைபெற்று முடிந்த மாநகராட்சி மன்றத் தேர்தலில் நல்லபடியாக அமைந்து விட்டிருந்தது.

காங்கிரசுக்கட்சி, 1959 வரையில் சென்னைமா நகரமன்றத்தில் அமர்ந்து அதிகாரம் செலுத்திக் கொண்டிருந்து விட்டு, பதவியை விட்டுக் கீழே இறக்கப்பட்டது. 1964-ல் கழகமே முழுப் பெரும் பாண்மையோடு மாநகராட்சியைக் கைப்பற்றிக்கொண்ட போது காங்கிரஸ் கூறிய குற்றச் சாட்டுகளை மக்கள் ஏற்கவில்லை என்பது தெளிவுபட்டதோடு, ஒப்புமை நோக்கில் காங்கிரசின் ஆட்சித்திறனைவிட கழகமே சிறந்தது என்ற முடிவினையும் வாக்காளர் பெருமக்கள் நற்சான்றிதழாக நல்கினர். 1964-ல்!!

1968 தேர்தலின்போது கழகம் தன் ஒன்பது ஆண்டுக்கால அனுபவத்தையும், ஆட்சிப் பணியையும் ஒப்பிட்டுக்காட்டியது.

காங்கிரஸ் 18 மாதகால கழகத்தின் ஆட்சியோடும், 9 ஆண்டுக்கால கழக மாநகராட்சி மன்றத்தின் பணியையும், தங்கள் இறந்தகால ஆட்சிச் சிறப்பையும் ஒப்பிட்டுக் காட்டி கழகத்தின் மீது கண்டனக் கணை தொடுத்தது மட்டுமல்ல மாநகராட்சியையே கைப்பற்றி அதன் மூலம் தமிழகத்தின் தலையெழுத்தையே மாற்றி விடப்போவதாகவும் சொல்லி வந்தது!

தேர்தல் முடிந்துவிட்டது. "தலைவிதி" எப்படி மாறப்போகிறது என்பதற்கான விளக்கத்தை இனி காங்கிரசின் ஏடுகளில், மேடைகளிலேதான் காண வேண்டும். என்றாலும் இந்த தேர்தலில் கிடைத்திருக்கும் சில சுவையான அனுபவத்தைக் கொஞ்சம் சுவைத்துப்பார்க்கலாம்! சுவைக்க அழைக்கிறேன்!

நண்பா! 100 வட்டங்களாகவிருந்த மாநகராட்சிப் பகுதி 120 வட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது இந்தத் தேர்தலில். இந்த 120 வட்டங்களிலும் காங்கிரஸ் தன் வேட்பாளர்களை நிறுத்தி பெருமையைக் காத்துக்கொண்டிருப்பது உண்மைதான்!

கழகம் 1959-ஐப் போல், 1968-ல் தனித்து தேர்தல் களத்தில் இறங்கவில்லை. கூட்டணியுடன் இணைந்து செயல்பட்டது. கூட்டணிக்குத் தரவேண்டிய வட்டங்களைத் தந்துவிட்டு எஞ்சிய தொகுதிகள் 96ல் மட்டுமே போட்டியிட்டது என்பது நீ அறிந்து கொண்டுள்ள பழைய செய்திதான்.

ஆனால் நண்பா! காங்கிரஸ் 120 வட்டங்களில் பெற்ற இடங்கள் 52! கழகம் தன் 96 வட்டங்களில் பெற்ற இடங்கள் 54! 120 தொகுதிகளிலும் கூட்டணி என்ற அளவுக்குக் கிடைத்த இடங்கள் 68!

கடந்த கால சாதனைகளையும், கழகம் செய்யத் தவறிய காரியங்களையும் எடுத்துக் காட்டி காங்கிரஸ் தன் பிரச்சார முறையை அமைத்துக் கொள்ளவில்லை. பொய்யான சில "சரடு"களையும்கூட "அவிழ்த்து" விட்டிருந்தது தாராளமாக!

வழக்கமாகக் கழகத்தின்மீது கூறப்படும் குற்றச் சாட்டுபோல, கழகத் தேர்தல் அறிக்கை என்பது இல்லை என்று கூறியது மட்டுமல்ல—ஏதேதோ லட்சம் லட்சமான வரி வருவாய்க்கும் செலவினங்களுக்கும் ஆக்கத் திட்டங்களுக்கும் தங்களிடம் திட்டமிருப்பதாக எடுத்துக் காட்டி, ஒரு கொள்கைப் பிரகடனமும் வெளியிட்டிருந்தது. நாளிதழின் இரண்டு மூன்று பக்கங்களின் அளவுக்கு,

கொள்கையற்ற கட்சி ஆட்சி என்று குற்றங் கூறப்பட்டு, தான்ஒரு கொள்கையினையும் கடைபரப்பி வைத்

## பிளாஸ்டிக் பேப்பர்

பல துறைகளிலும் புகுந்துவிட்ட பிளாஸ்டிக் இப்போது புதிய துறை ஒன்றில் பயன்படுகிறது. ஆம், பிளாஸ்டிக்கினுல் இப்போது பேப்பர் தயாரித்து வருகிறது ஒரு பிரிட்டிஷ் நிறுவனம்.

காகிதம் பிளாஸ்டிக்கினுல் செய்யப்பட்டிருந்தாலும் இதில் அச்சடிக்கப் பிரத்யேக இயந்திரம் வேண்டுமா என்ருல் தேவையேயில்லை; சாதாரண இயந்திரங்களையே இதிலும் அச்சடிக்கப் பயன்படுத்தலாம்!

மிக உயர்ந்த ஆர்ட் பேப்பரின் எல்லா சிறப்புத் தன்மைகளையும் கொண்டது. ஒருவிதத்தில் அதையும்விட சிறப்பானது. தண்ணீர் எண்ணை இவற்ருல் சிறிதும் பாதிக்கப்படாது. இதுதான் இதில் மிக மிக விசேஷமான அம்சம்.

சிரமம் எடுத்துக்கொண்டு முயற்சித்தாலே யொழிய இந்தக் காகிதம் கிழியாது. ஆர்ச்பேப்புரைப் போல இதனையும் மடிக்கலாம். அது 10,000 முறை மடித்தால் கிழிந்துவிடும். ஆனுல் பிளாஸ்டிக் பேப்பர் ஒரு லட்சம் முறை மடித்தாலும் கிழியாமல் உறுதியுடன் இருக்குமாம்!

துக்காட்டி இதோ பாரீர்! இனியன கேளீர்!! இன்பம்! இன்பம்! எம் வழி வாரீர்! எமை யாதரிப்பீர்!! என்றெல்லாம்காட்டி, காட்டவைத்து, சொல்லி, சொல்லச் செய்த பின்பும் மாநகராட்சித் தேர்தலில் 120 வட்டங்களில் பெற முடிந்த வாக்குகள், 3,60,745 மட்டுமே.

இந்த 120 வட்டங்களிலும் காங்கிரசுக்கு எதிராக, கூட்டணியினருக்கு மட்டும் கிடைத்த வாக்குகள் மொத்தம் 3,87,805 வாக்குகள். ஏறத் தாழ 27,000 வாக்குகள் காங்கிரசை விடக் கூடுதலாக காங்கிரஸ் எதிர்ப்பு வாக்குகள் கிடைத்துள்ளன.

96 இடங்களில் மட்டும் கழகம் பெற்றுள்ள மொத்த வாக்குகள் 3,15 449 ஆகும். இந்த 96-இடங்களில் மட்டும் காங்கிரசுக்குக் கிடைத்த மொத்த வாக்குகள் 2,93,013 மட்டுமே.

இவை, புள்ளி விவரங்கள் நண்பா! தமிழ் நாட்டின் தலையெழுத்தை மாற்றிவிடப் போவதாகக் கூறப்பட்ட கொள்கைகளுக்கும், கொள்கைச் சரக்குகளின் பிரகடனத்துக்கு அப்புறமும் கிடைத்த வாக்குகளின் ஒப்புமை தான் இது.

கழகம் போட்டியிட்ட 96 இடங்களில் மட்டும் காங்கிரஸ் சரக்கை ஒதுக்கித் தள்ளிவிட்டவர்களின் எண்ணிக்கை வேறுபாடு சுமார் 22,000.

120 இடங்களிலும் காங்கிரசுக்குக் கிடைத்த வாக்குகளைவிட, கூட்டணிக்குக் கிடைத்த வாக்குகளின் வேறுபாடு ஏறத் தாழ 27,000 ஆகும்.

மொத்தத்தில் காங்கிரசை, மீண்டும் பதவியில் அமரச் செய்ய வேண்டும் என்று விரும்பியோரைக் காட்டிலும், அதனைத் தடுத்து நிறுத்தவே விரும்பியோர் 27,000-க்கும் மேற்பட்ட வாக்காளர் பெருமக்களாக விருக்கிருர்கள்!

120 வட்டங்களில் காங்கிரசுக்குக் கிடைத்திருக்கிற இடங்கள் 52ம், கழகத்துக்குக் கிடைத்திருக்கிற 68ம் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமே ஒழிய, 96க்கு மட்டுமே கணக்கெடுத்துக் கொண்டு, சதவீதக் கணக்குப் போட்டுப் பார்ப்பது என்பது உண்மையை மூடி மறைத்து—அதன் மூலம் கழகம் செல்வாக்கிழந்துவிட்டது என்று காட்ட முயல்வது சுத்தமான மோசடியாகத்தானிருக்க முடியும்.

காங்கிரசுக்கு 100க்கு 49 ஸ்தானங்களும் கழகத்துக்கு 100க்கு 55 என்றும் பழைய கணக்கை ஒப்பிட்டுக் காட்டுகிறபோது காங்கிரசுக்கு கிடைத்துள்ளதைவிட அதிகமாக இப்போது கழகத்துக்கு 59 ஸ்தானங்கள் கிடைத்திருக்க வேண்டும் என்று எழுதி, அது செல்வாக்குக் குறைவுக்கு எடுத்துக்காட்டு என்று விமரிசனம் செய்வது என்பது உண்மையை மறைப்பதேயாகும்.

காங்கிரசுக் கட்சியின் சகலவிதமான எதிர்ப்பினையும் ஈடுகட்டி கூட்டுக் கட்சிகள் 68 இடங்களைக் கைப்பற்றி இருக்கின்றன என்பதனை மட்டும் கணக்கிடும்போது, காங்கிரசின் ஆட்சி ஒப்புமைகள் ஏற்கப்படவில்லை என்பதோடு, புதிய கொள்கை விற்பனையும் விலையாகாமற் போயிருக்கிறது என்ற தெளிவினைப் பெற்ருகவேண்டும்.

அதோடு 30, 40 வாக்குகள் வேறுபாட்டிலே மட்டும் வெற்றி வாய்ப்புக்களை இழந்துவிட்டிருக்கிற வேட்பாளர்களின் பகுதிகளையும் ஒதுக்கித் தள்ளிவிட முடியாது.

மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கைக்குவேண்டுமானுல் அது பயன்பட முடியாதிருக்குமே ஒழிய, செல்வாக்கு என்ற பிரச்னையில் இவையெல்லாம் இடம் பெற்றே தீரவேண்டும். இந்த வகையில் மட்டும் கணக்கிட்டுப் பார்த்தால்கூட கழகம் 62க்கும் மேற்பட்ட ஸ்தானங்களைப் பெற்றிருக்கிறது என்ற வாதத்தைக் கிளப்ப முடியுமே!

எப்படிக் கணக்குப் போட்டுப் பார்த்தாலும் காங்கிரசின் எதிர்ப்பு வாக்குகளே மொத்தத் தொகுதிகளிலும் அதிகமாக இருப்பதிலிருந்து, காங்கிரஸ் தன் செல்வாக்கை வளர்த்துக்கொண்டிருக்கவில்லை என்பதனை எதைக்கொண்டு மூடி மறைக்க முடியும்?

சுமார் 45 சதவீத வாக்காளர்கள் வாக்குச் சாவடியின் பக்கமே திரும்பிக்கூட பாராத நிலையையும் விட்டுவிட முடியுமா? இவர்கள் அத்தனைப்பேரும் வாக்குச் சாவடியின் பக்கம் வந்து, கழகம் தன் முழு வலிவை இழந்துவிட்டிருக்குமானுல் மட்டுமே காங்கிரசின் வாதத்தை ஒப்ப முடியுமே ஒழிய, 'கழகம் தேய்கிறது' என்ருல் எப்படி ஏற்கமுடியும்?

இந்த 45 சதம் வாக்குகளும் இருதரத்தாருமே இணைத்துக்கொள்ளத்தக்கவை அல்லவா! சாதகமாகவும் இணைத்துக்கொள்ளலாம். எதிர்ப்பு வாக்குகளாகவும் சேர்த்துக்கொள்ள முடியும்! ஆட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டதென்றும் அல்லது ஆத்திரப்பட்டு ஒதுங்கிக்கொண்டவை என்றும்கூட கூறமுடியுமல்லவா!

காங்கிரஸ் கொள்கையினை இவர்கள் ஏற்றுக் கொண்டிருந்தால், ஒதுங்கி இருப்பானேன்? முன்வந்து

வாக்களித்து, கழகத்தை வீழ்த்த அல்லவா முனைப்புக் காட்டி இருக்கவேண்டும்! வரவில்லையே—ஏன்?

கொள்கை விலையாகவில்லை என்பதல்லவா இதன் பொருள்! இந்த 45 சதவீத வாக்குகளாலும் காங்கிரஸ் காப்பாற்றப்பட வேண்டும் என்று நினைத்துப் பார்க்கிற போது, அப்படி நடவாமையை எதற்கு இணைப்பது? காங்கிரஸ் எதிர்ப்புக்குத்தானே கணக்கிடப்பட வேண்டும்? அதுதானே கழகம்தேய்ந்திருக்கிறது என்ற வாதம் கிளப்பப்படுமானால் சொல்லவேண்டிய பதிலாக விருக்கும்!

அது மட்டுமல்லாமல் நண்பா, 120 வட்டங்களிலும் காங்கிரஸ் பெற்ற வாக்குகளைவிட எதிர்ப்பு வாக்குகள் தானே அதிகமிருக்கிறது? அப்படியானால் கழகத்துக்கு முழுப் பெரும்பான்மை கிடைக்காமற்போனது ஏன்?

கழகத்திலிருந்து விலகி, கழகத்தின் நலத்தைவிட, தம் "பதவி வெறி"யே சுவையானது என்று வாக்குகளைப் பிரித்து, காங்கிரசுக்கு வெற்றி வாய்ப்பைத் தேடித்தந்த மீர்ஜாபர்களால் கழகம் 10க்கும் மேற்பட்ட இடங்களை இழந்திருக்கிறது என்ற கணக்கையும் விட்டுவிட முடியுமா? இணைத்துப் பார்த்தால் 64 இடங்கள் அல்லவா ஆகின்றன? இது முழுப்பெரும்பான்மை அல்லாமல் வேறென்ன? இந்த பத்தினையும் காங்கிரஸ் கணக்கிலிருந்து கழித்துப் பார்த்தால் காங்கிரசுக்கு 42 தானே ஆகிறது? சதவீதக் கணக்கு இங்கே சரிப்பட்டு வராமல், போவது ஏன்?

மாநகராட்சி மன்றத் தேர்தல் முடிவு மூலம் காங்கிரஸ் புதிய சரித்திரத்தைப் படைத்திருக்கிறது என்பதும், கழகம் வலிமைக் குன்றி இருக்கிறது என்பதும் சரியான வாதமாக விருக்க முடியாது.

10, 20 துரோகிகளது "பதவிவெறி"க்கு வெற்றி கிடைத்திருக்கிறது என்பதுதான் பொருளே தவிர கழகமோ, காங்கிரசோ மாறுதலடைந்து விட்டது என்பது போலியான வாதமேயாகும்.

சிலபேரது 'பதவி வெறி' காங்கிரசுக்கு ஒரு "வாய்ப்பாக"த்தான் அமைந்துவிட்டிருக்கிறதேஒழிய, மக்களது மனமாற்றத்தைப் பிரதிபலிக்கக்கூடியதாக எடுத்துக் கொள்ள முடியாது; அரசியலின் ஆழத்தைக் கணக்கிட்டுப் பார்ப்போரால்! இது போன்ற கொள்கைப் பிரச்னைகளுக்கு — மேலெழுந்த வாரியான விளக்கங்களும் பயன்படுத்தப்படக் கூடாது.

39 ஆக விருந்த காங்கிரஸ் 52 ஆக ஆகிவிட்டிருக்கிறது என்ற மேலோட்டமான வாதம், பொருந்தக் கூடியது அல்ல நண்பா! காரணம் கட்சியை எதிர்த்துச் செயல்பட்ட 'துரோகிகள்" சிலபேரது செயல், அப்படி ஒரு 'வாய்ப்பை" காங்கிரஸ் பெற வழிகோலி விட்டது என்பது உண்மையாக விருக்கின்ற வரையில்!

இது, காங்கிரசுக்கு ஒரு வாய்ப்பு—அவ்வளவே ஒழிய பெரிய மாறுதல் ஏதும் ஏற்பட்டுவிடவில்லை. இது, தமிழகத்தின் தலை எழுத்தை மாற்றக் கூடியதுமல்ல! மாற்றப் போவதுமில்லை. 13 இடங்கள் அதிகம் பெற்றுள்ளன—கருங்காலிகளது ஆதரவால்!

கருங்காலிகள் சில பேருக்கு, ஊக்கமும் உணவும் அளித்து பெறப்பட்ட வாய்ப்பு இது! மனமாற்றத்தால் கிடைத்த மகத்தான மாறுதல் அல்ல!

இதன் எதிரொலியை, சுப்பிரமணியனார் முதல், நிஜலிங்கப்பா வரையில் அறிவிக்கின்ற கருத்தோட்டங்களிலிருந்து, மக்களை ஏமாற்றப் பயன்படுத்துகிறார்கள் என்றுதான் நினைக்கவேண்டி இருக்கிறது.

ஒரே ஒரு மாற்றம்—இந்த முறை வாக்காளர் பெருமக்கள் தூற்றப்படவில்லை; இழிவு படுத்தப்படவில்லை! காரணம் பட்டறிவு தந்த பாடமாகவிருக்கக் கூடும். அந்த வகையில் காங்கிரசுக்கு நன்றி கூறிக் கொள்ளவேண்டும்!

நண்பா! மாநகராட்சி மன்றத்துக்காயினும், நகராட்சி, ஊராட்சி மன்றங்களுக்காயினும் கட்சி அரசியல் தேவையில்லை என்ற கருத்தினை அறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் எத்தனை முறை எடுத்துக்காட்டியிருக்கிறார்கள்?

நாட்டு மக்கள்தம் நல்வாழ்க்கையில் அக்கறை கொண்ட ஏடுகள், இதழ்கள் எத்தனை முறை இதனை எடுத்துக்காட்டி இருக்கின்றன?

நகர, கிராம மக்களின் சுகாதாரப் பிரச்னையையும், குடிநீர், பாதை வசதி முதலானவைகளையும் கவனித்து ஒழுங்குபடுத்த கட்சி அரசியல் தேவையா?

கட்சி அரசியல், எந்த அளவுக்குப் பயன்பட்டிருக்கிறது என்பதற்கு சென்னை மாநகராட்சியின் கடந்த கால அனுபவமும், நாடெங்கும் பரவலாக இருக்கின்ற நகராட்சி, ஊராட்சிகளின் அனுபவங்களும் நமக்கு மட்டுமல்ல — காங்கிரசுக் கட்சிக்கேகூட புலப்பட்டு விட்டிருக்குமே!

உதாரணத்துக்கு ஒன்றைமட்டும் காட்டுகிறேன். 1959-ல் கழகம் கட்சி அரசியல் முத்திரையுடன் மாநகராட்சிப் பொறுப்புக்கு வந்தவுடன் தரப்பட்ட திட்டம்தான் காவிரி நீர்த் திட்டம்—சென்னை மாநகரத்துக்கு.

அது முதல் 1967 வரையில், அதனைச் செயல் படுத்த முடிந்ததா? வெளியே ஆட்சி செய்துகொண்டிருந்த மாநிலகாங்கிரசுக் கட்சி, இத்திட்டம் ஈடேறாத அளவுக்கு எவ்வளவு முட்டுக்கட்டைகள் போட்டிருக்கின்றன—கழகத் திட்டம் என்பதற்காக! மத்திய அரசாவது ஒத்துழைத்ததா? இல்லை.

67-ல் கழகம் மாநில ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பின்னர், இப்போது திட்டம், செயலுருப் பெற்றுள்ளது. இதே திட்டம் கட்சி அரசியல் என்ற நிலை இல்லாமலிருந்திருந்தால், "மக்கள் நலன்" ஒன்றையே குறிக்கோளாகக்கொண்ட ஒரு அமைப்பினுடையதாயிருந்திருந்தால், சென்னை குடிநீர்ப் பிரச்னை எப்போதோ முடிந்துபோன ஒன்றாக அல்லவா ஆகிப்போயிருக்கும்!

கட்சி அரசியல் காரணமாகத்தானே காங்கிரசும் முட்டுக்கட்டை போட முனைந்தது! கட்சி அரசியலற்ற ஒரு நிலையில் காங்கிரசுக்கும் பொறுப்பிருக்கிறதல்லவா? முட்டுக்கட்டை போட எந்தக் கட்சியும் நினைக்கக்கூட முடியாதே!

காங்கிரஸ் கொள்கைகள் விலைபோகவில்லை என்று எதிர்க்கட்சிகளும், எதிர்க்கட்சிகளின் சரக்கு முறுக்கோடில்லை என்று காங்கிரசும் குற்றஞ்சாட்டிக் கொள்ளும் வாய்ப்பும் இல்லையே!

புதிய சரித்திரம் படைப்போர், முதலில் இதனை அல்லவா புரிந்துக்கொள்ளவேண்டும்!

நகராட்சி, ஊராட்சிகளில் கட்சி முத்திரை செயல் படுகிறதென்றால் அதனைப் பயன்படுத்திக்கொண்டு, கட்சியை வளர்த்துக்கொள்ள முனையு முடியுமே தவிர, பொது நலன், பொதுசேவை செயல்படும் விதத்திலே இயங்குகிற போக்கா காணமுடிகிறது?

தமிழகத்தின் தலையெழுத்தை மாற்றி எழுத நினைப்போர் இதுபற்றி நினைத்துப் பார்க்கமாட்டார்கள்—

காரணம், அவர்களுக்குப் பொதுநலன் என்பதைவிட கட்சி வளர்ச்சி மிகப் பெரிய ஆயுதம்!

மாநகராட்சியினையே எடுத்துக்கொள்! 68 இடங்களைக் கூட்டணிகைப்பற்றி, காங்கிரசுக்குஅதிகாரத்தை அளிக்கவில்லை. என்றாலும் கழகம்கூட முழுப் பெரும்பான்மையை எட்டவில்லை. மாநில ஆட்சி அதிகாரத்தைப்பயன்படுத்தி கடந்த ஒன்றரை ஆண்டுக்காலத்தில் சென்னையின் போக்கை மாற்றி இருக்க முடியாதா? பாவமான செயலா?

ஆட்சி அதிகாரம் வேறு, கட்சிச் செயல் வேறு என்று தீவிரமாக திராவிட முன்னேற்றக் கழகம் செயல்பட்டிருக்கிறது என்பதற்கு இதைவிட ஒரு சான்று, நிச்சயம் தேவையில்லை.

ஆனால், காங்கிரஸ் அப்படி இருந்ததா? இருக்கிறதா? ஊராட்சி அதிகாரங்களைக்கூட கட்சி நலனுக்கல்லவா பயன் படுத்தி வந்திருக்கிறது—பயன் படுத்தி வருகிறது!

கட்சிச்சார்பற்ற—கட்சி அரசியல் முத்திரையற்ற ஒரு அமைப்பாக இயங்கும் நிலை ஏற்படும்போது, பொது ஸ்தாபனங்களையும், பொது நலன்களையும் கட்சி முத்திரைக்குப் பலியிடும் போக்கு ஏற்படமுடியாது—நிச்சயம் முடியாது!

மாநில ஆட்சி, எந்த கட்சிக்குச் சொந்தமாயினும், இவற்றின் பொது நலன்களையும், வேண்டுகோள்களையும் புறக்கணிக்கவும் முடியாது. அலட்சியப்படுத்திக் கிடப்பில் போடும் முயற்சியும் வெற்றிபெற முடியாது!

தமிழகத்தைப் பொறுத்தமட்டில் கட்சி முத்திரைக்குத் துடியாய்த்துடிக்கும் ஒரே கட்சி காங்கிரஸ்தான் என்பது, கடந்த ஆண்டு அறிஞர் அண்ணா அவர்கள், கட்சிச்சார்பற்ற முறைபற்றி அறிவித்தபோது ஒப்புக்கொள்ளாததன் மூலம் நிரூபிக்கப்படுகிறது.

இப்போது நடைபெற்று முடிந்த மாநகராட்சித் தேர்தல் முடிவிலிருந்து ஒவ்வொரு அரசியல் கட்சியும் இதனைத் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும்.

மாநில ஆட்சி முறைக்கு இந்த வழியை மேற்கொள்ள எந்த கட்சியும் முன்வராது. அதற்கான பக்குவத்தை இந்தத் துணைக்கண்டமே பெற்றாகவில்லை. உலகம் கூடத்தான்!

குறைந்தபட்சம், ஊராட்சி, நகராட்சிகளிலாவது செயல்படச் செய்வதில் சங்கடம் ஏதும் எந்தக்கட்சிக்கும் இருக்க நியாயமில்லை.

துரோகத் தனத்துக்கு விலை கொடுத்ததால் மட்டுமே தன் "வளர்ச்சி"யைக் காட்ட "வாய்ப்புப்" பெற்ற காங்கிரசும், துரோகிகளைச் சந்திக்கநேர்ந்தாலும் எந்த வழியிலும், எந்த முறையிலும் தன் மீதான மக்கள் நம்பிக்கை மாறுபடவில்லை—குறையவில்லை என்று நிரூபித்துக்காட்டி இருக்கிற தி. மு. கழகமும் மாநிலத்தின் பிரதான கட்சிகள்!

ஆட்சி அதிகாரத்தை இழந்து, அல்லாடிக்கொண்டிருக்கும் காங்கிரஸ் இனியும் இந்த நன்னெறி வழியின் பக்கம் வரவிரும்பாது. கிடைக்கின்ற துரும்புக்கும் கட்சி முத்திரைப் பொறிக்கவே விரும்பும்.

வாதத்துக்காக, எந்தக் கட்சியையும் முழுமையாக விரும்பாத மாநகராட்சித் தேர்தல் முடிவு என்று ஒப்புக்கொண்டு இனியாவது புதிய சரித்திரம் படைக்க விரும்பினால், காங்கிரஸ் கட்சி நகராட்சி, ஊராட்சித் தேர்தல்கள் பற்றிநல்ல முடிவுக்கு வந்தாக வேண்டும்.

இரு பெரும் கட்சிகளும் இணைந்து எடுக்கின்ற நல்ல முடிவுக்கு, பிற கட்சிகளின் ஒத்துழைப்பைப் பெற நிச்சயம் பேரறிஞர் அண்ணாவால் முடியும்; முயன்றால் முடியாதது இல்லை. முயலவேண்டும்! அவ்வளவுதான்!

கட்சி அரசியல் கலப்பற்ற முறையில் ஊராட்சி, நகராட்சித் தேர்தல்கள் நடைபெறும் அரியதொரு வாய்ப்பு ஏற்பட்டால்தான், இந்த மாநகராட்சித் தேர்தல் மூலம் புதிய சரித்திரத்தைப் படைத்துக் காட்டியவர்களாக யாருமே இருக்க முடியும்!

எந்தக் கட்சியிலும், பதவி வெறி காரணமாகத் துரோகிகள் துளிர் விடுவதும், கருகிப் போவதும் இயற்கையான ஒன்றுதான்! காலத்தே கண்டறிந்து "களை" எடுக்கும் முயற்சிகூட அரசியலுக்கு ஒரு ஆரோக்கியத்தை ஊட்டும். அப்பணி, அடுத்த தேர்தல் முனைப்புக்குள் நடைபெற வேண்டும்.

நடைபெறச் செய்வது நமக்கெல்லாம் இருக்கிற மகத்தான பொறுப்பு நண்பா! என் இதயத்திலும் "துரோகம்" துளிர்விட்டுக் கொண்டிருக்கலாம்! எனக்குத் தெரியாமலேகூட இருக்கலாம்! கண்டுரைக்க வேண்டியது நீ! களையெடுக்கப்பட வேண்டியது துரோகத்தனம்!

இவையெல்லாம் குறுகிய காலத்துக்குள்ளேயே நடைபெற்று முடிந்தாக வேண்டும். அடுத்த கிழமை, நம்மையெல்லாம் அணைத்து, அரவணைத்து வழி நடத்திச் செல்லக்கூடிய நம் அண்ணன், அமெரிக்காவிலிருந்து திரும்பப் போகிறார்!

கனிவு ததும்பிய அவரது திருமுகத்தை, தூய—தெளிந்த முகப்பொலிவோடு தரிசிக்கத் தயாராகிக் கொள்ளவேண்டும்!

களங்கமே கண்டறியாத அவரது அருள் தோற்றத்தை, களங்கத்தின் கறை படிந்த முகங்களால் வரவேற்பதினும், திசை திரும்பாமலே இருந்துவிடுவது மேல்!

முகத்திலொன்றும், அகத்தி லொன்றுமாக வாழ்ந்தறியாத அண்ணன் வரவிருக்கிறார்! இரட்டை வாழ்க்கை வாழும் "களங்கங்களி"ன் நிழல் அல்ல—காற்றுகூட அவர்மீது உராய வேண்டாம்!

தம்பி! என்று அழைப்பதிலே பெற்ற இன்பம், மயக்கம், அனைத்தும் அழியாத தூய இதயங்களாக நம்மை நாமே மாற்றிக்கொள்வோம்!

சுட்டுவிரல் அசைவுக்கும் விழி வீச்சின் நெளிவுக்கும் பொருள் கண்டு, பொருந்த நடந்துகொள்ளும் பெருமைக்கு நாம் நம்மை ஆளாக்கிக்கொள்வோம்!

அதுதான் மாநகராட்சித் தேர்தல் மூலம் நாம் பெறவேண்டிய பாடம்! படைக்கின்ற புதிய சரித்திரம்!

கட்சி முத்திரை வேண்டாம்; என் கடன் பணி செய்வதே என்பதுதான் காங்கிரஸ் பெறவேண்டிய பாடம்—புதிய சரித்திரம் படைப்பதும் அதுதான்!

அன்புள்ள,

**திருவாரூர் முத்துராமன்**

# பூமழையால் வரவேற்போம்!

மழைமுகத்தைக் கண்டுபயிர் மகிழும்; வான
மதிமுகத்தைக் கண்டல்லி மலரும்; மங்கை
எழில்முகத்தைக் கண்டுமனம் மலர்வான் காளை;
ஈன்றவனின் முகங்கண்டு மகிழும் பிள்ளை;
கருமேக முகங்கண்டு மயிலும் ஆடும்;
கடவுள்முகம் கண்டின்பம் கொள்வான் பக்தன்;
திருக்குறளாம் எம் அண்ணா முகத்தைக் கண்டால்
திராவிடமே மலர்ந்தின்பம் கொள்ளும்! துள்ளும்!!

புலவன்மனம் நூல்முகத்தைக் கண்டு பொங்கும்;
பொருள்முகத்தைக் கண்டேழை நெஞ்சம் பொங்கும்;
நிலவாக ஒளிவீசி தமிழ கத்தார்
நெஞ்சிருக்கும் எம் அண்ணா முகத்தைக் கண்டே
அறம்மலரும்; அருள்மலரும்; மலரும் அன்பு;
அறிவுலகம் தான்மலரும்; மலரும் இன்பம்;
திறம்மலரும்; தரம்மலரும; மலரும் பண்பு;
தீந்தமிழன் வளம்மலரும்; மலரும் வாழ்வு!!

தாய்முகத்தை மறந்திருப்போம்; மங்கை இன்பந்
தான்மறப்போம்; தாவிவரும் மழலைச் செல்வம்
வாயுதிர்க்கும் சொல்லின்பம் மறப்போம்; நேரில்
வந்திருக்கும் நட்புறவு மறப்போம்; ஆனால்
மூச்சிருக்கும் வரையெங்கள் உயிராம் அண்ணன்
முகம்மறக்க மாட்டோமே; அறிஞர் அண்ணா
பேச்சுதிர்க்கும் இன்பத்தை மறக்க மாட்டோம்!!
பெயர்கூறி வாழ்த்துரைக்கத் தயங்க மாட்டோம்!!

பசிநோயை, பைந்தமிழ்க்கு வந்த நோயை,
பாடுபடும் உழைப்பாளர் துன்ப நோயை,
கசிந்துவரும் கண்ணீரால் உடல்கு ளிக்கும்
கடுமுழைப்பின் உழவர்களின் துயர நோயை
நீக்குகின்ற மருத்துவராம் அண்ணா வுக்கு
நெருங்கிவந்த நோய்நீங்கி மீளும் நாளில்
பூக்கின்ற வாழ்த்தொலிகள் விண்ணை எட்ட
பூமழையால் வரவேற்போம்!! வாழ்த்துக் கூறி!!

—புலவர் அரிமதி தென்னகன்.






லதாவின் அலங்காரம் அப்படியே ஒரு ஓவியத்தை வரித்துக்காட்டியது. இளமையின் வாளிப்பான தோற்றம், அவளது இடையசைவில் பளிச்சிடும்முன்னழகில் தளதளத்தது. மஞ்சள் வண்ண முகத்தில் ஏற்ய வெண்ணிற பவுடர் சிதறுகின்ற புன்னகைக்கு மேலும் புதுமையை உண்டுபண்ணியது.

சிறு குழந்தையை வீட்டில் நடக்கவிட்டு இருபுறமும் உட்கார்ந்து கொண்டு வேடிக்கைப் பார்த்து ரசிக்கும் தாய், தந்தையர்கள்போல் லதாவை அந்தக் குறுகிய கிணற்றுச் சந்து வழி நடக்கவிட்டு, உற்றுப்பார்த்துத் தமது ஊற்றின்பத்தைத் தீர்த்துக்கொள்ளும் கண்கள் எத்தனை எத்தனையோ!

அந்தக் கண்களுக்கு, தான் ஒரு விருந்தாக விளங்குகின்ற உண்மையை அறிந்தும் அவள், இடது கையை மடித்து மார்பிலே புதைந்துவிட்ட புத்தகங்களை அழுத்திப் பிடித்துக்கொண்டு ஒயிலான நடையைக் காட்டி, குறுக்கிட்ட தெற்கு மாசி வீதியில் இறங்கி நடக்க ஆரம்பித்தாள் கிழக்கு நோக்கி.

வனப்பில்லாத மேகம், வண்ண மலர்சூடிய லதாவின் கூந்தலைப் போல் கருத்துத் திரண்டு நின்றது. அவளது உச்சியின் கோடுபோல, பளிச்சிட்ட ஒரு மின்னல் மேகத்திடையே பாய்ந்து மறைந்தது. இடி, மின்னல், விட்டுவிட்டு எழுந்தன. சிலு சிலு என்ற மழைக்காற்று முந்தானையை பட்டமாக்கியது

சில விநாடி, வானம் தூரலிட ஆரம்பித்தது. அவளது பார்வை அப்போதுதான் 'தன் தனிமையை யார் யார் பார்க்கிருர்கள்' என்பதை அறிய இருபுறமும் திரும்பியது.

மழையும் வலுக்க ஆரம்பித்தது. மெல்லிய ஆடை, தண்ணீர்பட்ட பஞ்சானது. ஆயினும் அவளது நடை கூடவுமில்லை குறையவுமில்லை.

பள்ளியும் நெருங்கிவிட்டது. இடையே ஒரு குருகிய சந்து. அது தான் திருப்பம். அதைக் கடந்து விட்டால் பள்ளிக்கூடம்தான்.

''டீச்சர்! டீச்சர்! நில்லுங்க டீச்சர் உள்ளே வாங்க டீச்சர்; எங் கொடையிலெபோகலாம்'' குழலும், யாழும் தோற்றது அந்தக் குரலில்.

''வாங்கம்மா.......ஐயய்யோ! இதென்னம்மா கோலம்! எங்காவது ஒதுங்கி இருந்தாலென்ன? நல்ல புள்ளெம்மா நீ...வாம்மா உள்ளே. மலர்!...போய், அக்காளுக்கு அண்ணன் துண்டை எடுத்து வந்து கொடு:.....'' மலர்விழியின் தாய், தாய்மையின் பிரதிபலிப்பைத் தனது பரிவர்த்தனையில் காட்டினாள்.

''இந்தாங்க டீச்சர் இதால்தொடச்சுக்கங்க டீச்சர்'' மலர்விழி ஒரு டவல் துண்டைக் கொடுத்து விட்டு வீட்டுச் சமையலறையில் நுழைந்தாள். 'அழைக்காத விருந்தாகவா நுழைந்திருக்கிருள் லதா? இல்லையே. அதனுல் தான் தாயும், மகளும் லதாவைக் கவனிக்கும் வேலையின் முதற் படியாகக் காபியைத் தயாரிக்க மும்முரமாக இறங்கினுர்கள்.

துண்டை வாங்கிய லதா, தன் முகத்தில் திட்டுத் திட்டாகக் குடியேறிய மழைத் துளியையெல்லாம் துடைத்துக் கொண்டாள். தொளதொளத்துப்போன ஆடை வழியாக வடியும் நீரைக் காலி செய்யும் பொருட்டு பின்கட்டு வழியாகச் சென்று வலதுபுறம் இரண்டு அடியில் அமைக்கப்பட்டிருந்த திண்ணையில் ஏறி நின்ருள்.

அந்தப் பின் வராண்டாவின் ஓர் மூலையில் ஈசிச்சேரில் சாய்ந்து கொண்டு கிழக்குப் புறமாகத் திரும்பியவண்ணம் படித்துக்கொண்டிருந்த அரசன் அவளைக் கவனிக்கவே இல்லை. அவன்தான் மலர்விழியின் ஒரே அண்ணன். அமெரிக்கன் கல்லூரியில் பி. எஸ். சி. இரண்டாமாண்டு படித்துக்கொண்டிருக்கிருன். நல்ல எடுப்பான தோற்றம்.



நீரைப் பிழிந்துவிட்ட லதா சேலையின் முந்தானையை ஒரு உதறு உதறினுள். அது 'சரசர' என்ற ஒலியை எழுப்பியது. அந்த ஒலி கேட்டுத் திடுக்கிட்டுஎழுந்த அரசன் ''யாரு?'' என்ற கேள்வியையும் கேட்டுக் கொணடே பின் பக்கமாகத் திரும்பிப் பார்த்தான். முன்னே, அரை நிர்வாணக் கோலத்தில் யாருடைய தரிசனத்துக்காக ஏங்கி வாயிற்படியின் முன்னே நின்ருனே, அவள் நிற்கிருள். ஒருமுறை உற்று நோக்கினுன். அதற்குள் உண்மையான ஆண்மை விழித்துக்கொண்டது போலும்! கூச்சத்தால் மறுபடியும், கிழக்குப் புறமே திரும்பிக் கொண்ட அதே வேளையில், எண்ணம் மட்டும் எதையோ கற்பனை செய்யத் தொடங்கியது.

ஒரு கோல மயில், தினம் காலையிலும், மாலையிலும் அவன் வீட்டு வழியே ஊர்வலம் செல்கின்ற பூவண்ணத் தேரர்கச் செல்பவள். அவளது வருகையை அறிந்தே அவளது கவர்ச்சியில்தான் மயங்கி



விட்டதாகக் காட்டி, அவளைக் கவர பல தடவை முயற்சி செய்தான், இன்றுவரை தோல்விதான். அதன் சலிப்பில்தான், இன்று இனி அவள் பக்கம் திரும்பவே கூடாது என்று கங்கணம் கட்டிக்கொண்டு படிப்பில் கவனம் செலுத்தினான்.

ஆனால் நடந்தது என்ன? தேடிச் சென்ற தெய்வம் வழியில் வந்து நின்று காட்சி தந்ததுபோல் இன்று லதா அரசனுக்குக் காட்சி தந்தாள்.

அவளும் இது நாள்வரை அவனின் பார்வைக்குள் தாம் சிக்கியிருப்பதை அறிந்து, அவனைக் கடந்து போகும் போதெல்லாம் வெறுப்போடு கலந்த நெருப்புச் சுடரை அவன்மேல் விசாமல் சென்றதில்லை. ஆனால் பாவம்! அவனுக்கோ முதல் அனுபவத்தில், அவளைக் காணும் போதெல்லாம், சிந்தாமல் சிதறாமல் அழகையெல்லாம் உள்ளத்தோடு சேர்த்து 'இந்தா'வென்று தன் கையில் அவள் கொடுப்பதான வாஞ்சை; நினைப்பு!

அவனோ ஆண்களுக்குள்ளே பொறாமைப்படும் அழகில் மெருகேறிக் காணப்பட்டான். நண்பர்களில் புனைந்துரைப்பதற்கே சிலர் இருப்பது உண்மைதானே! அந்தப் புனைந்துரையால் புத்திகெட்ட அரசன் லதாவின் அழகில் மயங்கி 'எப்படியும் அவளை அடைந்தே தீர வேண்டும்' என்றும் முடிவு கட்டினான். ஆனால் இன்று?

தனிமை கனவிலும், வாய்விட்டுப் புலம்பும் பருவம்; எதிரே கனவுக் கன்னி. புனையா ஓவியம், அதிலும் பேசும் ஓவியம், அவனது ஆண்மை மனம், சபலத்தில் மூழ்கித் திணறியது திரும்பினான். அவள் விழித்தாள். அவன் கூர்ந்து நோக்கினான்.

திடுக்கிட்டுப் போன அவள் நெஞ்சு, கோழிக் குஞ்சின் இறகை யடிப்பது போல் படபடவென்று அடித்துக் கொண்டது.

அவன் இவ்வளவு நாள் பார்த்ததைவிட இன்று பார்த்தபார்வை... அவள் காலெடுத்துத் திரும்பினாள். அவன் கரங்கள் அவளை வளைத்துப் பிடித்து நிறுத்தியது.

"லதா! உன்னை நான் மனமார நேசிக்கிறேன்" அவன் வார்த்தை கணீர்! கணீர்! என்று ஒலித்தது. "ஒருத்தி ஒருவனுக்குத்தான்" லதா தான் அவன் வார்த்தையின் முடிவில் அரைப் புள்ளியை வைத்து விட்டு விடு, விடுவென்று வீட்டிற்குள் நடந்தாள்.

* * *

பலகாரமும், காப்பியும் கையுமாக வந்த மலர்விழியும், தாயும், வீட்டை விட்டு வெளியேறி, பர்பரவென்று நடந்து கொண்டிருந்த 'லதாவை' கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தார்கள்!

* * *

"ஏங்கடீச்சர் நனைஞ்சுவந்தீங்க?"

"என்ன லதா, இது?"

"வழியில் கொஞ்சநேரம் ஒதுங்கி நின்னு வந்தாலென்ன?"

இப்படிச் சரமாரியான கேள்விகள் எழுந்தன. லதாவின் சக ஆசிரியைகளின் கூட்டத்தில்.

லதா என்றால் எல்லோருக்கும் அவ்வளவு பிரியம், அந்த அளவுக்கு அவள் புத்திசாலி; நல்ல அழகி; தவறான எண்ணமோ, சொல்லோ, செயலோ இல்லாதவள். அமைதிக்கும், அறிவுக்கும் லதாதான் பொருள்; போய் அவளைப் பார்த்து கத்துக்கங்க" இப்படிப் புகழாரம் சூட்டியவர், அந்தப் பள்ளியின் தலைமை ஆசிரியைதான்.

"டீச்சர்! டீச்சர்! என்று சுற்றித் திரிகின்ற பிள்ளைகளைத் தவிர அவள் அருகில் இது நாள்வரை வேறு யாரையுமே பார்த்ததில்லை நான்"

—இப்படிக் கூறியது அவளது சக ஆசிரியைகளில் பொறுமையே உருவான ஆசிரியை ருக்குமணி தான்.

"என்ன கூட்டம்?...... ஓ......! லதாவா? அடடடா! இதென்ன?" தலைமை ஆசிரியையின் குரல் கேட்டுக் கலைந்தனர் மற்றவர்கள். "நேற்றுக் குடையை இங்கேயே மறந்து வச்சிட்டுப் போயிட்டேன் டீச்சர்" லதாவின் பணிவான குரலில் தலைமைஆசிரியை மெய்ம்மறந்தாள். அவளது நலத்தில் அக்கறை காட்டும் உரிமைத் தோற்றத்தை அப்போது காட்டினார்கள்.

"குட்மார்னிங் டீச்சர்!" இது ஒரு குழந்தையின் குரல் "அடி போடி... உங்களாலதான் பாவம்! இப்படி நனையவேண்டியதாகி விட்டது..ம்.. வகுப்புக்கு போ."

"டீச்சர் அதுங்கமேல என்ன தப்பு?... அது என் தப்புத்தான்" "அதெப்படி? கொஞ்ச நேரமாவது உனக்கு இடைவேளை கொடுத்தாவில நீ உன்னைப் பற்றி நினைக்க முடியும், விடிந்தது முதல், இரவு படுக்கப்போகும் வரை டீச்சர்! டீச்சர்தான்?" "அதுதான் டீச்சர் என் கடமை. என் வாழ்வே அதுதானே டீச்சர்" லதாவின் யாழிசையில் துயரம் இழைந்தோடியது. அதை மறைப்பதற்காகப் புதிரற்ற புன்னகையை உதட்டில் தழுவ விடுவதாக எண்ணிக் கொண்டே மெதுவாகத் தலையைத் திருப்பித் தன் வகுப்பறையை நோக்கினாள்.

"சரி சரி லதா, பள்ளி முடிந்ததும் கொஞ்சம் வந்து போறியா"?

"சரிங்க டீச்சர்" லதாவின் கால்கள் தான் வேகமாக நடந்தது. ஆனால் அவள் உள்ளம்?

மாலை வரை, காலையில் நடந்த நிகழ்ச்சி அவளை விட்டு—அவளது உள்ளக் கிடங்கை விட்டு அகலவில்லை. அதோடு...! ஏன் என்று மில்லாமல் தலைமையாசிரியை அழைக்கிறார்?"

என்றும்போல வரட்டுப் புன்னகையை இதழில் வருடவிட்டு விட்டுப் பாடத்தை நடத்தத் தொடங்கினாள்!

* * *

மருத்துவச் சிகிச்சை முடிந்து

# முதலமைச்சர் அறிஞர் அண்ணா

அவர்கள்

6—11—68 அன்று காலை சென்னை திரும்புகிறார்கள்.



"லதா! என் நீண்ட நாளின் ஆசையை நிறைவேற்றுவதற்காகத் தான் உன்னை அழைத்தேன்..."

தலைமை ஆசிரியையின் புரியாத வாசகம் லதாவை நிமிர்த்தி உட்கார வைத்தது.

மேலும் தலைமை ஆசிரியையே தொடர்ந்தார்கள்.

"லதா! நீ, என் வீட்டிற்கு மருமகளாய் வந்துவிட வேண்டும்... என் நீண்டநாளைய ஆசை. நீ சம்மதித்து, நிறைவேற்றிவைப்பாயா...?"

அதைக் கேட்டதும் லதாவிற்குத் தூக்கி வாரிப்போட்டது. காய்ந்துவிட்ட உதடுகளை ஈரப்படுத்திக் கொண்டாள். எச்சிலைக் கூட்டி விழுங்கித் தனது இதயத்தில் எழுந்த தீயை அணைத்துக் கொண்டாள்.

தன் ஆசையை வெளிப்படுத்திக் கொண்டு, பதிலுக்காகக் காத்திருக்கும் அந்த அம்மையாருக்கு எதை, எதையோ வெல்லாம் கூறத் துடித்தது நெஞ்சம். 'நா' மட்டும் எழவில்லை. அது தளதளத்தது.

"டீச்சர்!......பூவும், பொட்டும், மஞ்சளும் ஒரு பெண்ணுக்குக் கணவனை அடைந்த பிறகுதான் கிடைக்கிறதா?"

"இல்லை"

"அப்படியிருக்க, கணவனை இழந்த பிறகு, அவனளிக்காத பூவும், பொட்டும் மஞ்சளும் ஏன் இழக்க வேண்டும்?"

லதாவின் முகம் சிவந்தது. கண்களில் நீர் முட்ட ஆரம்பித்தது.

"லதா! ஒரு ஆடவன் — அதாவது கணவன்; அவனால்தான் பெண்மை என்ற மெய்யுணர்வுக்கு முழுமை என்ற புனிதம் பிறக்கிறது. ஒரு பெண் தன் பெண்மை, முழுமை பெறுவதற்கு அந்த மஞ்சள், குங்குமத்தில் கமழ்கின்ற தத்துவ உண்மைக்குப் பரம்பொருளான கணவன் தான் காரணம். அந்தப் புனிதத் தன்மையால் தான் தெய்வமாய்ப் போற்றி வந்த பெற்றோர்களையும் எளிதில் மறக்கச் செய்கிறது 'இனி, எல்லாம் கணவன்தான்' என்ற நிலை ஏற்படுகிறது. அந்த புனிதத்தின் பெரும்பொருளுக்கு ஈடு, இணை எதுவுமே இல்லை. அத்தகைய உயர்ந்த தெய்வத்தையே இழந்த பிறகு சாதாரண பூவும், பொட்டும், மஞ்சளும் எதற்கு? மங்களப் பொருள்களாக இருந்தாலும் இல்லத்தின் மன்னவன் இல்லை என்றால் அது மாசுப் பொருளம்மா."

தலைமை ஆசிரியர் கூறிக் கொண்டே போகப் போக லதாவின் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாக வழிந்தோடியது. எழுந்தாள்; தனது முந்தானையை எடுத்துக் கண்ணீரைத் துடைத்துக் கொண்டே.

"மன்னிக்கணும் டீச்சர்; நான் வர்றேன்..." லதா தலையைத் தாழ்த்தியவண்ணம் பள்ளியை விட்டு நடந்துகொண்டிருந்தாள்.

வானத்து நிலவு, மண்ணகத்தில் வந்து, வண்ணம் பல சூடி வீதி வழி நடந்து செல்வதுபோல் காட்சியளித்த லதா, இன்று மஞ்சளும், குங்குமமும், பூவுமிழந்து, தூய்மையின் பொருளுக்கான ஆடையை— வெண்ணிற ஆடையை உடுத்திக் கொண்டு நடந்துவந்தாள் அந்த குறுகிய கிணற்றுச் சந்து வழி. என்றும்போல நடைதான்! ஆனால், அதில் பழைய கவர்ச்சியில்லை!!

தலை தாழ்த்தி நடந்து சென்றாள் தெற்கு மாசி வீதி வழி. நாணத்தால் அல்ல; பயிர்ப்பால்!

வெறுமை கொண்ட அவளது தோற்றம், பார்ப்பவர்களுக்கு விளங்காத புதிராகத்தான் தோன்றும். மங்களமும் மங்கையும்தான் விரக்தி கொண்ட நெஞ்சங்களுக்கு ஆகாரமாகத் தோன்றுமோ? எத்தனையோ நெஞ்சங்கள் அவளது கைம்மைத் தோற்றத்தில் புனிதத்தைக் கண்டு மெய் சிலிர்த்து நின்றன!

## விற்பனையாளர்களுக்கு

விற்பனையாளர்கள் அனைவருக்கும் அக்டோபர் மாத பட்டியல் அனுப்பப்பட்டு உள்ளது. விற்பனையாளர்கள் தங்கள் பாக்கித் தொகை முழுவதையும் அனுப்பிவைத்து ஒத்துழைக்க வேண்டுகிறோம்.

உரிமையாளர்,
'காஞ்சி'




## 2. நான்தான் வந்திருக்கிறேன்!

திருவரங்கத்துரை திடீரென்று இறந்த செய்தி அண்டை ஜமீன்களுக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது. எப்படிச் செத்தார், ஏன் செத்தார்? என்ற சந்தேகம் மட்டும் ஒவ்வொருவர் உள்ளத்தையும் கிளறிக்கொண்டே இருந்தது. மங்களசாமி மூத்த மகன் என்பதற்காக துக்கம் விசாரிக்க வந்தவர்களெல்லாம் அவனிடம் அனுதாபம் தெரிவித்தார்கள். பக்கத்திலிருந்த அபிமன்யு ஒவ்வொரு நிமிடமும் கண்களைக் குளமாக்கி கசக்கிக்கொண்டே இருந்தான். ‘தான் செய்த தவறுகளையும் தத்துவங்களையும் சன்யாசிகள்தான் வெளிப்படையாகச் சொல்லவேண்டுமோ? என்னைப்போன்ற சாதாரண மனிதன் சொன்னதினால் எவ்வளவு பெரியவிபரீதம் ஏற்பட்டுவிட்டது?’’ என்று அபிமன்யு தனக்குள்ளேயே எண்ணி துக்கித்துக்கொண்டிருந்தான்.

‘‘அபிமன்யு’’ அந்தப்புரத்திலிருந்து குரல் வந்தது.

அன்னையின் குரல் கேட்டு அபிமன்யு உள்ளே போனான். அவனுக்குத் துக்கம்அதிகமாகிவிட்டது. குங்குமப் பொட்டையும் குளிர்ந்த பார்வையையும் இழந்தகோலத்தில் அபிமன்யு அவனது அன்னையைப் பார்த்தான்.

‘‘கத்தியின்றி, ரத்தமின்றி நீ உன் ந்தையைக் கொன்றுவிட்டாய். உன்னால்தான் அவர் இறந்தார் என்ற உண்மை சிவகங்கைக்கும் புதுக்கோட்டைக்கும் தெரிந்தால் நமது ஜமீனுக்கு அழிக்க முடியாத களங்கம் ஏற்பட்டுவிடும். நெருப்புத் துண்டு போன்ற வார்த்தைகளைத் தூக்கி எறிந்து உன் தந்தையைத் தீர்த்துவிட்டாய். அடுத்து நான் ஒருத்திதான் இருக்கிறேன். என்னையும் தீர்த்துவிட எண்ணியிருந்தால் இப்போதே சொல்லிவிடு. ஓசையில்லாமல் ஒருதுளி நஞ்சைத் தின்று முடித்துக்கொள்கிறேன்.

‘‘அபிமன்யூ, உனக்கே நியாயம் தானா? ஒரு ஜமீன் வீட்டு இளைய ராஜா, கொஞ்சங்கூட மனம் கூசாமல் ‘எனக்குத் திருமணமாகி விட்டது’ என்று பெற்று வளர்த்த தந்தையிடம் சொல்ல எப்படித்தான் துணிந்தாயப்பா!’’—அன்னையின் புலம்பல் அபிமன்யுவின் உள்ளத்தைக் குடைந்தது.

‘‘அப்பா என்னுடன் எப்போதும் விளையாட்டாகப் பேசுவார்கள். அன்றும் விளையாட்டாகத்தான் பேசுகிறார்கள் என்று எண்ணி பதில் சொல்லிவிட்டேன். நான் குடும்ப கௌரவம் தெரியாதவனா? உங்களையெல்லாம் கேட்காமலா திருமணம் செய்துகொண்டுவிடுவேன்!’’ என்று அமைதியாகச் சொன்னான் அபிமன்யு.

அன்னை திடுக்கிட்டாள். ‘அபிமன்யு, உண்மைதான் பேசுகிறாயா? இது விளையாட்டா?’’ என்றாள் அன்னை.

‘‘சத்தியமாகச் சொல்கிறேன் அம்மா! திருமணமாகிவிட்டது என்று நான் சொன்னதற்கு ஒரு முக்கியமான காரணமுண்டு. வாராப்பூர் ஜமீன்தார் மகள் வாழவந்தாளைத்தான் எனக்கு மணப் பெண்ணாகத் தேர்ந்தெடுத்திருப்பதாக அறிந்தேன். அந்தப் பெண்ணுக்கு மாறுகண், ஈக்காய் வலிப்பு என்று அறிந்தும் அவளை என் தலையில் கட்டிவிடத்தீர்மானித்ததுதான் எனக்கு வேதனையாக இருந்தது. அதனால்தான் அப்பாவிடம் அவ்வாறு சொன்னேன்’’ என்று அபிமன்யு பதில் சொன்னது அன்னையின் இதயத்தைத் தடவியது. முப்பதாண்டுகளுக்கு முன்பு தனது வாழ்க்கையில் நடந்த ஒரு சம்பவம் அவளுக்கு நினைவுக்கு வந்தது. குதிரையிலிருந்து விழுந்த ஒரு நொண்டி ஜமீன்தாருக்கு தான் வாழ்க்கைப்பட மறுத்ததை அவள் எண்ணிப்பார்த்தாள். கண்களில் துளிர்த்திருந்த கண்ணீரைத் துடைத்துக்கொண்டாள்.

‘‘அபிமன்யு உன் மனக்குறையை என்னிடம் கூறியிருக்கலாம். விருந்து சமைக்கப்போய் வீட்டைச் சாம்பலாக்கிய மாதிரி உன் தந்தையின் கதை முடிந்தது. உன் விருப்பப்படி திருமணம் செய்துகொள்ளலாம். உனக்காக எந்த ஜமீனுக்கும் போய்

நவம்பர் மத்தியிலிருந்து
மாண்புமிகு அமைச்சர்
மா. முத்துசாமி
அவர்களது
**இரஷ்யப் பயணம்**
பற்றிய தொடர் கட்டுரை
காஞ்சியில் வெளிவருகிறது.

பெண் கேட்க நான் தயாராக இருக்கிறேன். மங்களசாமிக்குக் குழந்தையில்லாக் குறையால் நமது மரபுக்கு உள்ளபுகழும், நாணயமும் மறைந்து விடக்கூடாது. மரம், நட[illegible] காலத்தில் பூத்துக்காய்த்தால்தான் அவனுக்குப் பூரிப்பு. அதைப் போல் என் கண்ணெதிரே, இந்த மாளிகையில் ஒரு மழலைச் செல்வம் தவழவேண்டும். அதுதான் என் ஆசையும், உன் தந்தையின் ஆசையும். மங்களசாமி நல்லவன்தான். அவன் மனைவியும் உத்தமிதான். சின்ன வயதிலிருந்தே அவளை அன்புடன் வளர்த்தேன். அவள் உடல் நலம் குன்றிப்போனால் அவளுக்குப் பிறக்கும் குழந்தை ஊனமாகப் போய்விடுமோ என்று பயந்து பாலும், பாதாம்பருப்பும் தினம் தினம் கொடுத்தேன். அவள் மனச் சோர்வும், தாழ்வான எண்ணமும் கொண்டுவிட்டால் அவளது எழில் குறைந்துவிடுமே என்று பயந்து அவளுக்கு எல்லாவிதமான அதிகாரத்தையும் கொடுத்தேன். நான் எதிர்பார்த்த அழகும் வலிமையும் அவள் பெற்றுவிட்டாள். ஆனால் அவள் புத்திரபாக்கியம் பெறவில்லை. பிள்ளைக்கு புத்தி சொல்லலாம்; மகளுக்கு மணப் பயிற்சி தரலாம் குழந்தையைத் தரமுடியுமா ஒரு தாயால்? ஒரு தாயினுடைய கடமையை நான் நிறைவேற்றி வைத்தேன். ஆனால் ஒரு இளம் தம்பதிகளுக்கு இறைவன் செய்யவேண்டிய கடமையை நிறைவேற்றவில்லை. இறைவனைக் கோபித்துக் கொள்ள முடியாமல், இளையவனிடம் கெஞ்சிக் கொண்டிருக்கிறேன். நீதான் என்னை மகிழ்விக்க வேண்டும். உனக்குப் பிள்ளை பிறந்தால்தான் இந்த ஜமீன் மகிழும். மக்கள் விழாக்கொண்டாடுவார்கள். இல்லாவிட்டால் உன் தந்தையோடு இந்த ஜமீனும் தீர்ந்துவிடும். கிளர்ச்சியும் கலவரமும் ஏற்பட்டு சின்னாபின்னமடைந்துவிடும்.'' என்று அன்னை அழுது கொண்டேவார்த்தை தொடுத்தாள்.

அபிமன்யு எதையோ சொல்ல நினைக்கிறான்; நா கூசுகிறது. கால் விரலால் தரையைத் தேய்த்துக் கொண்டே நின்றான்.

''அம்மா, என்னைக் கோபித்துக் கொள்ளாதீர்கள். சிவகாசியிலே வகுப்புக் கலவரம் நடந்ததே தெரியுமா? அதனால் பாதிக்கப்பட்ட பல குடும்பத்தினர் நம் ஜமீனில் வந்து குடி அமர்ந்தார்களே நினைவிருக்கிறதா? அவர்களிலே ஒருவர் தினகரசாமி தேவர் என்பவர் வந்தாரே, அவரது மகள் அன்னம்மா'' என்று அபிமன்யு முடிக்குமுன் குறுக்கிட்டு ''ஏன் அவளுக்கென்ன! நம்வீட்டுக் குதிரை லாயத்திலே வேலை பார்த்தாளே அவள் தானே!'' என்று அன்னை பதில் சொன்னாள்.

அப்போது ஏதோ ஒரு உருவம் அந்தப்புறத் தலைவாசலில் வந்து நிற்பது தெரிந்தது.

''யாரது?'' என்று கேட்டாள் அன்னை.

''நான்தான் தினகர சாமித்தேவன் வந்திருக்கிறேன்'' என்றார் தினகரர்.

அபிமன்யுவுக்கு நெஞ்சில் எறும்பு கடிப்பது போலிருந்தது.




## ஒருமைப்பாட்டுக்கு உகந்ததல்ல!

''அண்மையில் மத்திய அரசு தனது ஊழியர்களின் அகவிலைப் படியை உயர்த்தி, ஆண்டுக்கு ரூ. 30 கோடிவரை அதிகச்செலவு ஏற்படும்படிச் செய்ததை ஏற்றுக்கொள்வதற்கில்லை; கடந்த ஓராண்டில் மத்திய அரசு ஊழியர்களின் அகவிலைப்படி உயர்வால் ரூ. 60 கோடி செலவு அதிகரித்துள்ளது; இதன்மூலம் நாட்டுக் குடிமகன் ஒவ்வொருவனுக்கும் ரூ. 1-25 வரை அதிகச் சுமை ஏற்பட்டுள்ளது.

நாட்டில் ஒரேவிதமான குடியுரிமைதான் இருக்கிறது; மத்திய அரசு ஊழியருக்கு ஒருவகை வாழ்க்கைத்தரமும், மாநில அரசு ஊழியருக்கு ஒருவித வாழக்கைத்தரமும் இருந்துவருவது நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு உகந்ததாகாது.

—அனுமந்தையா, (நிருவாகச் சீர்திருத்தக்குழுத் தலைவர்)

# இவையெல்லாம் இவ்வுலகச் செய்திகளே!

## வீடு வேண்டுவோர் விண்ணப்பிக்கலாம்!

'கெட்ட குடியே கெடும்' என்பது எப்படியும் பொய்யாக முடியாது. இந்தோனேஷியாவுக்கே போவோம்! பதவியிலிருந்து துரத்தப்பட்டதோடு சுகர்ணோ விடப்படவில்லை! வழக்குகள் வேறு போட்டார்கள்! சொத்துக்கள் பறிமுதல்கூட செய்யப்பட்டன. ஒண்டி நிற்க ஒரு வீடாவது விட்டுவைக்கக் கூடாதா? அவரது கடைசி மனைவி தேவி ரத்னா ஜப்பானுக்கே போய்விட்டதாகச் செய்தி வந்தது. விட்டுப் பிரிந்தாரா? விரட்டப்பட்டாரா என்பதெல்லாம் பரம ரகசியம்! இப்போது அவரது இரண்டாவது மனைவி ஹர்த்தினி தேவிக்கு தலைபோகிற அளவுக்குக் கஷ்டங்களாம்! கடன் சுமை, தாங்க முடியவில்லையாம். மிக மிக ஆடம்பரத்தோடு மிக அண்மையில் கட்டப்பட்ட நவீன மாளிகையை விற்றுவிட முடிவு செய்திருக்கிறாராம்! சில பலபேர் விலை பேரமும் நடத்திவிட்டார்களாம்! ஹர்த்தினி அம்மையாரால் சுமார் 5,17,500-ரூபாய் விலை கூறப்படுகிறதாம். இன்னும் சரியான விலை பேரம் முடிவுறவில்லையாம். வேண்டுவோர் விண்ணப்பிக்கலாம். வீட்டையும் விற்று வயிற்றைப் பேண வேண்டிய அளவுக்கு அவர் குடும்பம் கெட்டதற்கு நம் அனுதாபங்களை இரகசியமாகத்தான் அனுப்பிவைக்க வேண்டும்!

## பல்லுக்கு சர்க்கரை பகை அல்ல!

மேற்கு ஜெர்மனி எப்போதுமே திடுக்கிடத்தக்க—அதிசயிக்கத்தக்க செய்திகளை அவ்வப்போது விடுத்துக் கொண்டிருப்பது என்பது வாடிக்கையான விஷயம் தான்! வினோதமான செய்திகளானாலும் அதன் கூடவே விஞ்ஞான உண்மைகளும் இணைந்திருந்து நம்மைக் குழப்பி விட்டுவிடும். சில ஆராய்ச்சிகள் நம்மை அதிசய உலகின் உச்சிக்கேகூட அழைத்துப் போவது இயல்புதான்! சில ஆண்டுகளுக்கு முன்பு மிளகு பற்றிய ஒரு செய்தி வந்தது. மிளகைப் பயன்படுத்துவதால் மூளை பாதிக்கப்படுமா? என்பதற்கு ஆராய்ச்சி நடப்பதாகச் செய்தி வந்தது! முடிவுதான் என்னவென்று தெரியவில்லை. இப்போது புது ஆராய்ச்சி! ஆனால் முடிவும் இருக்கிறது. பல்லுக்கு சர்க்கரை பகை அல்ல! என்பதுதான் ஆராய்ச்சியும் முடிவும்! சர்க்கரை, மற்றும் இனிப்புப் பண்டங்களை அதிகமாகப் பயன்படுத்துவதால் பல் வியாதிகள் வரக்கூடும் என்பதுதான் இதுவரையில் மருத்துவ உலகம் கூறிவந்த செய்தி! இதனால் 'கேரீஸ்' என்ற பல் நோய் வரக்கூடும் என்பார்கள்! இது முற்றிலும் பொய்; சர்க்கரைக்கும் பல்நோய்க்கும் தொடர்பு ஏதுமில்லை என்று பெர்லினில் உள்ள பல்வைத்தியக் கல்லூரி பேராசிரியர் டாக்டர் எஸ் வாண்டெல்ட் தெரிவித்திருக்கிறார்! வியக்கிறீர்களா? திகைக்கிறீர்களா?

## ஒன்றென்ன, ஒன்பதுகூட!

சட்டம் மட்டும் அனுமதிக்குமானால், ஒன்றென்ன—ஒன்பது பேரைக்கூட மணப்பேன் என்று கூறுபவர்கள் இந்த நாட்டில் மட்டும் அல்ல, எல்லா நாட்டிலுமே இருக்கத்தான் செய்கிறார்கள். பலதார மணத் தடைச் சட்டம் இல்லாத நாடுகளும் இருக்கின்றன என்றாலும் இப்படிக் கூறுவது ஒரு நாகரிக முறை! வாய்ப்பும், வசதியும் கிடைத்தால் செயல்படுத்திக் காட்டி சிறப்புப் பெறுவோரும் உண்டு! ஆனால் உலகத்தின் பொதுப் பிரச்னை, இன்று மக்கள் தொகைப் பெருக்கம் கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்பதாகவே இருக்கிறது. வளர்ந்துவரும் நாடுகளில், மக்கள் தொகைப் பெருக்கமும் கூடவே வளர்ந்து, வளர்ச்சி பற்றிய ஐயப்பாட்டையே உண்டாக்கி வருகிறது என்பதற்கு இந்தியா ஒரு எடுத்துக் காட்டு! என்றாலும் உலகத்தின் சில பகுதிகளில் போதிய மக்கள் தொகை இல்லாத காரணத்தால், அதன் வளர்ச்சி குன்றி வருவதாகவும் அவ்வப்போது செய்திகளும் வந்துகொண்டுதான் இருக்கின்றன! பிரேசில் நாட்டில் உள்ள அமேசான், மாட்டோ குரோசோ முதலிய பகுதிகளில், அபிவிருத்திக்குத் தேவைப்படும் அளவுக்கு மக்கள் தொகை இல்லை என்று அங்கலாய்த்துக் கொண்டிருக்கிறார் சட்டப் பேரறிஞர் ஒருவர். அது மட்டுமல்ல—ஒருவர் பல பெண்களை மணந்துகொள்ள சட்டம் அனுமதி தர வேண்டும்; அதன் மூலம் இந்தப் பிரச்னைக்கு முடிவு காணலாம் என்றும் அவர் கருத்தறிவித்திருக்கிறார். பொதுமேடை யொன்றில்—மக்கள் திரளுக்கிடையே அல்ல—பல்கலைக் கழகமொன்றில் மாணவர்களுக்கிடையே இப்படிச் சொல்லி இருக்கிறார்! மாணவர்கள் அவர்கள்! கைதட்டி வரவேற்றார்களாம்! சட்ட அறிஞர் மேலும் கூறும்போது, ஒவ்வொரு ஆணுக்கும் 4 மனைவிகளும் 10 குழந்தைகளும் உடனடியாகத் தேவை என்றாராம்! மாணவர்கள் செயல்படத் தொடங்கினார்களா என்பதற்கு மட்டும் விளக்கம் கிடைக்கவில்லை!

## மனிதனும் கெடிகாரமும் அப்படித்தான்!

உலகத்தில் உள்ள அத்தனை மனிதர்களுக்கும் கண் காது, மூக்கு, வாய், கை, கால் முதலான அனைத்து உறுப்புக்களும் அப்படி அப்படியே ஒரே வடிவத்திலேயே இருந்தாலும், ஒருவருக்கொருவர் ஏதாவது ஒரு வகையில் வேறுபாடு கண்டுகொள்ளத்தக்க அளவுக்கு அமைப்பு இருப்பதென்பது இயற்கையின் இரகசியம்! புறத்தோற்றத்தில் காணப்படும் இந்த வேறுபாடு போலவே, உலகத்தில் எந்த இரண்டு கடிகாரங்களும்—வினாடிகூட முன்பின் இன்றி சரியாக ஓடக்கூடியதாக இருக்காது—இருப்பதில்லை என்பதும் ஒரு இரகசியமான செய்திதான்! ஆனால், அண்மையில் நடைபெற்று முடிந்த ஒலிம்பிக் பந்தயங்களில் முக்கியமாக நிர்ணயிக்கப்படுவது நேரத்தைதானாம்! இந்த நேரத்தைத் துள்ளியமாகக் கணக்கிட்டுக்காட்ட ஒரு வினாடியை ஆயிரம் பங்காகப் பிரித்துக்காட்டும் எலெக்ட்ரானிக் கெடிகாரங்கள் இதற்குப் பயன்படுத்தப்படுமாம்! இதற்காக சுவிட்சர்லாந்தில் உள்ள ஒமேகா என்ற கெடிகார நிறுவனம் 227 கடிகாரங்களைச் செய்து மெக்சிகோவுக்கு அனுப்பி இருந்ததாம்! 1932 முதல், இந்த நிறுவனம்தான் தன் ஒமேகா' என்ற கடிகாரத்தை ஒலிம்பிக் போட்டிக்கு அனுப்பிக்கொண்டிருக்கிறதாம்! அந்த 227 கெடிகாரங்களாவது ஒன்றுக்கொன்று வேறுபாடின்றி இருந்ததா என்பது தெரியாது. ஆனால் 1932 முதல் அதுவும் பந்தயத்தில் கலந்து கொண்டு வருவதாகக் தெரிகிறது. இந்த ஆண்டு இந்தியாவுக்கு ஒரே ஒரு வெண்கலப்பதக்கம் கிடைத்தது! ஆனால் இந்த நிறுவனத்துக்கு?

ராஜிமணாளன்—தொகுத்தவை,

# KAMALA SUGAR MILLS LTD.,

(GLUCOSE FACTORY)

**Amaravathi Nagar (P.O.) UDUMALPET. S. RLY.,**

COIMBATORE DIST.

## LIQUID GLUCOSE "GRADE-A"

**WE HAVE STARTED PRODUCTION OF OUR NEW GLUCOSE "GRADE-A" FROM THIS MONTH ONWARDS. THIS GLUCOSE IS PURIFIED BY "DEMINERALISER" WHICH GIVES GOOD COLOUR AND AVOIDS STICKNESS.**

**SO IT WILL BE A GREAT ADVANTAGE TO THE CONSUMERS OF GLUCOSE LIQUID FOR THE MANUFACTURE OF CONFECTIONARY SWEETS, BISCUITS, SYRUPS AERATED WATERS AND PHARMACEUTICALS.**

Our Distributors For Madras, South Arcot, North Arcot and Chingleput Districts:

**P. SINGARAVELU,**
310, Wall Tax Road, Madras-3.

OUR SALES BRANCHES AT:—

MADURAI: 28-B. ELUKADAL AGRAHARAM.
TRICHY: 9, CHINNAKKADAI STREET.
KUMBAKONAM: 84, J. P. KOIL EAST STREET.


ஆசிரியர், வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்—8
86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், அச்சிட்டு வெளியிடப்படுகிறது.